மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 128/23 |
| பெயர் | : | முத்துகாளீஸ்வரி (PW1) |
| த/பெ. | : | சங்கரன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(A2 Muthusamy is absent. Petition filed U/s.317 crpc and allowed.A1 Muthumadathi already charge abated.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the9 th day of May 2024

<u>முதல் விசாரணை</u>

1)நான் எப்போதும்வென்றானில் வசிக்கிறேன்.நான் வீட்டில் இருக்கிறேன்.சாட்சி விஜயா என் அம்மா.எதிரிகள் முத்துசாமி,முத்துமாடத்தி,முத்துஉஷாவை தெரியும்.முத்துமாடத்தி இறந்துவிட்டார்.

2)இறந்து போன முத்துமாடத்தி என் அப்பாவின் உடன்பிறந்த அக்கா.எங்கள் ஊரின் தெற்குபுறம் சோலசாமி கோவிலுக்கு பக்கத்தில் என் அப்பாவும் இறந்துபோன முத்துமாடத்தியும் சேர்ந்து 2 ஏக்கர் இடம் வாங்கினார்கள்.அந்த இடத்தில் ஆட்டு தொழுவம் நாங்கள் வைத்திருந்தோம்.அவர்கள் விதைத்து கொண்டிருந்தார்கள்.

3)21.02.2021 அன்று காலை 11 மணிக்கு முத்துமாடத்தியும் முத்துசாமியும் அந்த காட்டில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.முத்துஉஷா அவருடைய தோழிகளுடன் உட்கார்ந்து சோப்பு போட்டு கொண்டிருந்தார்.அந்த கிணறு குடிநீர் பயன்படுத்தப்படும் கிணறு.ஆடு மாடுகளுக்கு அதில் இருந்துதான் தண்ணீர் கொடுப்போம்.நான் முத்துஉஷாவிடம் குடிநீர் கிணறு என்பதால் வேறு பிள்ளைகளை அழைத்து வந்து துணிக்கு சோப்பு போடதீர்கள் என்று சொன்னேன்.என்னை முத்துஉஷா அப்படித்தான் துணி துவைப்போம் சோப்புபோடுவோம் தேவிடியா என்று கெட்ட வார்த்தையால் அசிங்கமாக பேசினார்கள்.முத்துஉஷா என்னை தலையை பிடித்து கீழே தள்ளி என் வலது காதில் அடித்துவிட்டார்.அதன்பின்னர் முத்துமாடத்தியும் முத்துசாமியும் என்னை

கீழே தள்ளிவிட்டு முதுகு,கழுத்து ,கைகளில் அடித்தார்கள்.பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த என் அம்மா சத்தம் கேட்டு ஓடிவந்தார்.என் அம்மாவிடம் எதிரிகள் அப்படித்தான் அடிப்போம் என்று சொல்லிவிட்டு தொழுவத்தை காலி செய்யுமாறு மிரட்டினார்கள்.

4)என் அம்மா எப்போதும் வென்றான் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச்சென்றார்.அங்குமுதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன்.அங்கு போலீசார்கள் வந்தார்கள்.அவர்களிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன்.என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலம் நான் கொடுத்ததுதான் அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையததுதான்,என் அம்மா அதில்ே அறிவேன் சாட்சி கையொப்பம் செய்தார். (**மேற்படி புகார்வாக்குமூலம் அசா ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(எதிரி தரப்பில் சந்தர்ப்பம் அளித்தும் குறுக்குவிசாரணை இல்லை என்று எதிரி தரப்பு வழக்கறிஞரால் எடுத்துரைப்பு செய்யப்பட்டது)

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.